[1972 ஆகஸ்ட் 25

Drought affected areas.

* 258 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that the works started in the drought affected areas of Panchayat Unions in Ramanathapuram district with the financial assistance of the Central Government to provide employment opportunities have been suspended; and

(b) if so, the reasons therefor?

வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் ஜில்லா பஞ்சாயத்து யூனியன் பிரதேசங்களில் வேலையளிக்கும் திட்டத்தில் மத்திய சர்க்கார் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) அதற்குக் காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, கடந்த ஓராண்டு காலமாக இந்த வேலைகளெல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவா என்று இந்த மன்றத்தில் கூட அங்கத்தினர்கள் கேட்டார்கள். இன்றைக்கு என்ன நிலை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் என்றாலும் இப்போது திட்டங்கள் நடைபெறவில்லை.

Ceiling on Urban Property

* 259. Q.—THIRU G. SWAMINATHAN and THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that the Committee set up by the Govenment to go into the question of fixing a ceiling on urban property has submitted its report; and

(b) if so, the important recommendations of the Committee?

1972 ஆகஸ்ட் 25]

நகர்ப்புறச் சொத்தின் மீது உச்சவரம்பு

திரு. ஜி. சுவாமிநாதன்,

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகர்ப்புறச் சொத்தின் மீது உச்சவரம்பு விதிப்பது குறித்து ஆய்வு செய்ய அரசு அமைத்த குழு தனது அறிக்கையை அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், குழுவின் முக்கியமான பரிவுரைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இக்குழுவின் பரிவுரைகள் அரசின் ஆய்வில் உள்ளன; குழுவின் பரிவுரைகளை இந்த நிலையில் வெளியிடுவது பொது நலனுக்கு ஏற்றதல்ல.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வருவதை அனுமதிக்கப் போகிறதா அல்லது மாநில அரசு கொண்டு வரப் போகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மத்திய அரசு இன்னும் முடிவு செய்யவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக மத்திய அரசு தன் கருத்துக்களை அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மத்திய அரசு சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறது. இதுபற்றி ஆராய அரசு ஒரு குழு அமைத்து அவைகள் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, விளக்கம் கொடுக்காமல் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னால், பயனில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பது தான் பொருள். மேலும் விவரங்கள் தருவது பொது நலனுக்கு ஏற்றதல்ல என்று கருதுகிறேன்.

Industrial Licences

* 260 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the industrial licences issued for Tamil Nadu by the Central Government during 1971–72?